RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-104 | 21 ஏப்ரல் | திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## ‘உங்கள் தேசத்தின் சிறுபான்மையினர் நலனை பேணவும்’ வங்கதேசத்துக்கு இந்தியா பதிலடி

புதுடெல்லி, ஏப்.21

வக்பு திருத்தச் சட்டத்தின் காரணமாக மேற்குவங்கத்தின் முர்ஷிதாபாத்தில் நடந்த கலவரம் குறித்த வங்கதேச அரசின் கருத்துகளை இந்தியா நிராகரித்துள்ளது. மேலும் அவை பொய்யானவை என்றும் வங்கதேசத்தில் சிறுபான்மையினர் தாக்கப்படுவதில் இருந்து திசைத் திருப்பும் முயற்சி என்றும் கூறியுள்ளது.



முன்னதாக, வங்கதேசத்தின் தலைமை ஆலோசகர் முகமது யூனுஸின் செய்தித் தொடர்பாளர் வியாழக்கிழமை, “மேற்கு வங்கத்தின் முர்ஷிதாபாத்தில் கடந்த வாரத்தில் ஏற்பட்ட வன்முறையில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர், நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர். பாதிக்கப்பட்ட முஸ்லிம்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை இந்திய அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும்.” என்று தெரிவித்திருந்தார்.

வங்கதேசத்தின் இந்தக் கருத்தினை இந்தியா கடுமையாக நிராகரித்துள்ளது. இது தேவையற்றக் கருத்து என்றும், வங்கதேசம் அவர்கள் நாட்டின் சிறுபான்மையினர் நலனை பாதுகாப்பதில் கவனம் செலுத்தவேண்டும் என்று தெரிவித்துள்ளது.


வெளியுறவுத்துறைச் செய்தித்தொடர்பாளர் ரன்திர் ஜெய்ஸ்வால் கூறுகையில், “மேற்குவங்க சம்பவம் தொடர்பாக வங்கதேசம் தெரிவித்துள்ள கருத்துகளை இந்தியா முற்றிலும் நிராகரிக்கிறது. அது ஒரு கபட முயற்சியாகும்.

வங்கதேசத்தில், அங்குள்ள சிறுபான்மையினர் தொடர்ந்து துன்புறுத்தப்படுவதற்கு எதிராக இந்தியா தனது கவலையை தெரிவித்து வருகிறது. அதற்கு இணையாக வங்கதேசம் இவ்வாறு ஒரு விஷயத்தை எடுத்து வைக்கிறது. அங்கு வன்முறையாளர்கள் இன்னும் சுதந்திரமாகவே நடமாடி வருகின்றனர்.” என்று தெரிவித்துள்ளார்.

## ‘அரசியலமைப்பு தான் அனைத்தையும் விட உயர்ந்தது’ ஜக்தீப் தன்கருக்கு திருச்சி சிவா பதிலடி

சென்னை, ஏப்.21

குடியரசுத் தலைவருக்கு நீதிமன்றங்கள் உத்தரவு பிறப்பிக்க முடியாது என குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர் கூறியிருந்த நிலையில், ”அரசியலமைப்பு தான் அனைத்தையும் விட உயர்ந்தது என்பதை ஒருவர் மறந்துவிடக் கூடாது” என்று திமுக துணைப் பொதுச் செயலாளர் திருச்சிசிவா பதிலடி கொடுத்துள்ளார்.



இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் சமூகவலைதளப் பக்கத்தில் அவர் பகிர்ந்துள்ள பதிவில், “அரசியலமைப்பின் அடிப்படையில் பிரிக்கப்பட்ட அதிகாரங்களின் படி நிர்வாகம், சட்டமன்றம்/ நாடாளுமன்றம் மற்றும் நீதித்துறை ஆகியவை தனித்தனி அதிகாரங்களைக் கொண்டுள்ளன. இதன் அடிப்படையில் இம்மூன்று துறைகளும் அவரவர் துறைகளில் இயங்கினாலும் அரசியலமைப்பு தான் அனைத்தையும் விட உயர்ந்தது என்பதை ஒருவர் மறந்துவிடக் கூடாது.

ஆளுநர்கள் மற்றும் குடியரசுத்தலைவர்களின் பங்கு என்ன என்பது குறித்து உச்சநீதிமன்றம் அரசியலமைப்பு சட்ட பிரிவு 142 ஐ பயன்படுத்தி சமீபத்தில் தெளிவுபடுத்தி உள்ளது. அதில் அரசியலமைப்பு அதிகாரம் என்ற பெயரில் எந்தவொரு தனிநபரும் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை காலவரையின்றி நிறுத்தி வைக்க முடியாது என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி நிறுவியுள்ளது. இந்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு குறித்த துணைக்குடியரசுத் தலைவர் ஜக்தீப் தங்கரின் கருத்துகள் நெறிமுறையற்றவை! இந்திய ஒன்றியத்தில் “சட்டத்தின் ஆட்சி” தான் நடக்கிறது என்பதை ஒவ்வொரு குடிமகனும் அறிந்திருக்க வேண்டும்.” எனக் குறிப்பிட்டிருந்தார்.


ஜக்தீப் தன்கர் பேசியது என்ன? டெல்லியில் நேற்று நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர் பேசியதாவது: டெல்லி உயர் நீதிமன்ற நீதிபதி யஷ்வந்த் வர்மா வீட்டில் கடந்த மார்ச் 14ம் தேதி இரவு தீ விபத்து ஏற்பட்டது. அப்போது, ஒரு அறையில் கட்டுக்கட்டாக பணம் இருந்ததை தீயணைப்பு வீரர்களும் போலீஸாரும் பார்த்துள்ளனர். ஆனால் இது தொடர்பான தகவல் ஒரு வாரத்துக்குப் பிறகுதான் ஊடகங்களில் வெளியானது. இதைப் பார்த்து நாட்டு மக்கள் அதிர்ச்சி அடைந்தனர். தாமதமாக இந்த தகவலை வெளியிட்டது கண்டிக்கத்தக்கது. இதுகுறித்து விசாரணை நடத்த வேண்டும். நாட்டு மக்களால் மதிக்கப்படும் நீதித் துறை குற்றவாளி கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கிறது.

மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்க குடியரசுத் தலைவர், மாநில ஆளுநர்களுக்கு உச்ச நீதிமன்றம் காலக்கெடு விதித்திருப்பது கண்டிக்கத்தக்கது. நீதிமன்றங்கள் குடியரசுத் தலைவரை வழிநடத்தும் சூழ்நிலை ஜனநாயகத்தில் இருக்க முடியாது. நீதிமன்றங்கள் குடியரசுத் தலைவருக்கு எந்த ஒரு உத்தரவையும் பிறப்பிக்க முடியாது. இவ்வாறு அவர் தெரிவித்திருந்தார்.

## ஆளுநர் ஆர்.என்.ரவி திடீர் டெல்லி பயணம்

சென்னை, ஏப்.21

ஆளுநருக்கு எதிராக உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், நேற்று மாலை ஆளுநர் ஆர்.என்.ரவி திடீரென டெல்லி புறப்பட்டுச் சென்றார்.



தமிழக ஆளுநர் ஆர்.என். ரவிக்கு எதிராக தமிழக அரசு தொடர்ந்த வழக்கில் சமீபத்தில் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் தராததை கண்டித்ததுடன், அந்த மசோதாக்களுக்கு சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி உச்சநீதிமன்றமே ஒப்புதல் அளித்தது. அத்துடன், குடியரசுத்தலைவர் மற்றும் ஆளுநர் ஆகியோர் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பதற்கான காலக்கெடுவையும் விதித்து உத்தரவிட்டது. உச்சநீதிமன்றத்தின் இந்த தீர்ப்பு நாடு முழுவதும் அதிர்வலையை ஏற்படுத்தியது.

இதையடுத்து, மத்திய அரசு இந்ததீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்வதற்கான பணிகளை தொடங்கியுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த சூழலில், கல்லூரி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற ஆளுநர் ஆர்.என்.ரவி, ‘ஜெய் ஸ்ரீராம்’ என மாணவர்களை கூறும்படி செய்தது, சர்ச்சையை உருவாக்கியது. இதற்கு ஆளும் திமுக மற்றும் பல்வேறு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று மாலை ஆளுநர் ஆர்.என்.ரவி டெல்லி புறப்பட்டுச்சென்றார். மூன்று நாள் பயணமாக டெல்லி சென்ற ஆளுநருடன், அவரது செயலர், உதவியாளர், பாதுகாப்பு அதிகாரி ஆகியோர் சென்றுள்ளனர். வரும் ஞாயிற்றுக்கிழமை 20ம் தேதி அவர் மீண்டும் சென்னை திரும்புகிறார்.

ஆளுநரின் பயணம் வழக்கமானதாக ராஜ்பவன் தரப்பில் கூறப்பட்டாலும், சமீபத்தில் சென்னை வந்த மத்திய அமைச்சர் அமித்ஷாவை ஆளுநர் சந்திக்கவில்லை. இந்நிலையில், சமீபத்திய நிகழ்வுகள் தொடர்பாக சட்ட வல்லுநர்களின் ஆலோசனைகளை பெற ஆளுநர் திட்டமிட்டுள்ளதாகவும், இதுகுறித்து மத்திய அமைச்சர்களிடம் அவர் ஆலோசனை பெற வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகிறது.

## பொன்முடி மீது வழக்குப்பதிவு? காவல்துறை தீவிர ஆலோசனை..

சென்னை, ஏப்.21

தமிழக வனத்துறை அமைச்சர் பொன்முடி கடந்த ஏப்ரல் 6 ஆம்தேதி பெரியார் திராவிடர் கழகம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்றார். அப்போது பெண்கள் குறித்தும் சைவம் வைணவம் மதங்கள் குறித்தும் அருவருக்கத்தக்க வகையில் ஆபாசமாக பேசினார். அவரது பேச்சு தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.



அவரது இந்த பேச்சுக்கு கடும் கண்டனங்கள் எழுந்தன. குறிப்பாக சைவம் மதத்தை உடலுறவுடன் ஒப்பிட்டு பேசிய அமைச்சர் பொன்முடிக்கு இந்துத்துவ அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்தன. இதையடுத்து திமுக எம்பி கனிமொழி பொன்முடிக்கு கடும் கண்டனம் தெரிவித்தார். இதனை தொடர்ந்து பொன்முடி திமுக துணை பொதுச்செயலாளர் பதவியில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டார்.

தனது பேச்சு பலரது மனதையும் புண்படுத்தி இருக்கும் என கூறிய பொன்முடி மனப்பூர்வமாக மன்னிப்பு கேட்பதாக அறிக்கை வெளியிட்டார். இந்நிலையில் பொன்முடி தொடர்பான சொத்துக் குவிப்பு வழக்கு நேற்று சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிபதி ஆனந்த வெங்கடேஷ் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அப்போது அமைச்சர் பொன்முடியின் சர்ச்சைப் பேச்சு குறித்து வீடியோவை ஒளிபரப்புமாறு கூறிய நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ், ஒரு அமைச்சர் இப்படி பேசலாமா என கண்டனம் தெரிவித்தார்.

தொடர்ந்து அவரது பேச்சு தொடர்பாக காவல்துறை ஏன் வழக்கு பதிவு செய்து செய்யவில்லை என கேள்வி எழுப்பிய நீதிபதி ஆனந்த வெங்கடேஷ், அமைச்சர் பொன்முடியின் இந்த சர்ச்சை பேச்சு தொடர்பாக வழக்கு பதிவு செய்யவும் உத்தரவிட்டார். இந்நிலையில் அமைச்சர் பொன்முடி மீது வழக்கு பதிவு செய்வது தொடர்பாக காவல்துறையினர் ஆலோசனை நடத்திவருகின்றனர். நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதால் பொன்முடி மீது விரைவில் வழக்குப்பதிவு செய்யப்படும் என கூறப்படுகிறது.

இதனிடையே அமைச்சர் பொன்முடியின் அமைச்சர் பதவியையும் பறிக்க திமுக தலைமை ஆலோசித்து வருவதாக கூறப்படுகிறது. மதப்பிரச்சனையை தூண்டும் வகையில் பொன்முடி பேசியிருப்பதால், கட்சிக்கு பாதகம் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்க திமுக தலைமை முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. திமுக மூத்த நிர்வாகியான பொன்முடி மீது அடுத்தடுத்து பாயும் நடவடிக்கைகள் கட்சிக்குள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

## சீனா மீதான வரிவிதிப்பு முடிவுக்கு வரக்கூடும்! ட்ரம்ப் விவரிப்பு

வாஷிங்டன், ஏப்.21

சீனா மீதான வரிவிதிப்பு நடவடிக்கை முடிவுக்கு வரக்கூடும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். அதற்கான காரணத்தையும் அவர் விவரித்துள்ளார்.



கடந்த ஜனவரியில் அமெரிக்க அதிபராக மீண்டும் பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப், உலகின் பல்வேறு நாடுகள் அமெரிக்கப் பொருட்களுக்கு அதிக இறக்குமதி வரி விதிப்பதாகவும், இனி தங்கள் நாடும் பரஸ்பர வரியை விதிக்கும் என்றும் அறிவித்தார். இந்த அறிவிப்பை செயல்படுத்தும் விதமாக கடந்த 2ம் தேதி இந்தியா, சீனா, இங்கிலாந்து, கனடான, மெக்சிகோ உட்பட உலகின் பல நாடுகளின் பொருட்களுக்கு இறக்குமதி வரியை உயர்த்தினார். இந்தியாவுக்கு 27% வரியை உயர்த்திய அமெரிக்கா, சீனாவுக்கு 34% வரியை உயர்த்தியது.

அமெரிக்காவின் இந்த வரி உயர்வுக்கு உலகின் பல நாடுகளும் கடும் கண்டனம் தெரிவித்தன. அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்கு பதிலடி கொடுக்கும் விதமாக அமெரிக்கப் பொருட்களுக்கான இறக்குமதி வரியை மேலும் உயர்த்தியது. அமெரிக்காவின் அதிரடி வரி விதிப்பு சர்வதேச பொருளாதாரத்தில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியதை அடுத்து, சீனா தவிர்த்த அனைத்து நாடுகளுக்குமான வரி உயர்வை 10% ஆக குறைப்பதாக ட்ரம்ப் அறிவித்தார்.

அதோடு, சீன பொருட்களுக்கான இறக்குமதி வரியை மேலும் உயர்த்தினார். இதையடுத்து, சீனாவும் அமெரிக்கப் பொருட்களுக்கான வரியை உயர்த்தியது. அமெரிக்காவின் போயிங் விமான நிறுவனத்திடம் இருந்து ஜெட் விமானங்களை வாங்க தடை, விமான உதிரி பாகங்கள் வாங்க தடை, அரிய கனிமங்கள் ஏற்றுமதிக்கு தடை என பல்வேறு கட்டுப்பாடுகளையும் தங்கள் நாட்டு நிறுவனங்களுக்கு சீனா விதித்தது.

சீன பொருட்களுக்கான இறக்குமதி வரியை அமெரிக்கா 145% ஆக உயர்த்தியது. அமெரிக்க பொருட்களுக்கான இறக்குமதி வரியை சீனா 125% வரை உயர்த்தியது. இந்த எண்கள் விளையாட்டால் யாருக்கும் பலன் இருக்காது என தெரிவித்த சீனா, இனி அமெரிக்காவின் இத்தகைய எண்கள் விளையாட்டுக்கு பதில் அளிக்கப் போவதில்லை என அறிவித்தது. அதாவது, அமெரிக்கா இனி எவ்வளவு வரி உயர்வை அறிவித்தாலும், பதிலுக்கு வரியை உயர்த்தப் போவதில்லை என சீனா கூறியது.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கையை சமாளிக்க, ஐரோப்பிய நாடுகளுடனான ஒத்துழைப்பை அதிகரிக்கவும் சீனா பேச்சுவார்த்தை நடத்தியது. மேலும், அண்டை நாடுகளுடன் உறவை மேம்படுத்துவதற்கான தனது திட்டத்தையும் சீனா அறிவித்தது.

இந்நிலையில், அமெரிக்காவும் சீன பொருட்களுக்கான இறக்குமதி வரியை இனி உயர்த்தாது என்று அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப், “ஒரு குறிப்பிட்ட கட்டத்தை வரி உயர்வு எட்டி விட்டது. எனவே, மக்கள் சீன பொருட்களை வாங்க மாட்டார்கள். அதனால், இனியும் வரியை அதிகமாக்க நான் விரும்பவில்லை.

வரி உயர்வை அதிகரிக்க நான் விரும்பாமல் இருக்கலாம் அல்லது அந்த நிலைக்குச் செல்ல விரும்பாமல் இருக்கலாம். ஒரு குறிப்பிட்ட கட்டத்தில், மக்கள் வாங்கப் போவதில்லை என்பதால் நான் வரியை குறைக்கும் முடிவை நோக்கி செல்ல விரும்பலாம்” என தெரிவித்துள்ளார்.

வரிகள் விதிக்கப்பட்டதிலிருந்து சீனா தொடர்பில் இருப்பதாகவும், அவர்கள் ஒரு ஒப்பந்தத்தை எட்ட முடியும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தியதாகவும் ட்ரம்ப் கூறியுள்ளார். அதேநேரத்தில், பேச்சுவார்த்தைகளின் தன்மையைக் குறிப்பிடவோ அல்லது சீன அதிபர் ஜி ஜின்பிங்கும் தொடர்பில் இருக்கிறாரா என்பதைக் குறிப்பிட ட்ரம்ப் மறுத்துவிட்டார்.

## புனித வெள்ளி நாளில் கருணை, இரக்கத்தைப் போற்றுவோம்: பிரதமர் மோடி

புதுடெல்லி, ஏப்.21

பிரதமர் மோடி தனது எக்ஸ் தளத்தில் பகிர்ந்த பதிவில், “புனித வெள்ளி நாளில் நாம் இயேசு கிறிஸ்துவின் தியாகத்தை நினைவுகூருகிறோம். இந்த நாள் நம்மை கருணை, இரக்கம் ஆகியவற்றைப் போற்றவும், எப்போதும் பரந்த மனதுடன் இருக்கவும் தூண்டுகிறது. அமைதியும், ஒற்றுமை உணர்வும் எப்போதும் மேலோங்கட்டும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

கிறிஸ்தவர்கள் கடைபிடிக்கும் 40 நாள் தவக்காலம் சாம்பல் புதன்கிழமையுடன் மார்ச் 5 ஆம் தேதி தொடங்கியது.. இதிலிருந்து 7 வாரங்கள் கிறிஸ்தவ மக்கள் தவக்காலத்தை கடைபிடிக்கின்றனர். ஈஸ்டர் பண்டிகைக்கு முந்தைய வாரம் குருத்தோலை ஞாயிறாக கடைபிடிக்கப்படுகிறது. இதன்படி கடந்த ஏப்.12 ஆம் தேதி குருத்தோலை ஞாயிறு கடைபிடிக்கப்பட்டது. தொடர்ந்து இன்று வெள்ளிக்கிழமை (ஏப்.18) புனித வெள்ளியாகக் கடைபிடிக்கப்படுகிறது. புனித வெள்ளி நாளில் கருணை, இரக்கத்தைப் போற்றுவோம் என பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

## மே. வங்கத்தில் வன்முறையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடுகிறார் ஆளுநர் ஆனந்த போஸ்

கொல்கத்தா, ஏப்.21

மேற்கு வங்க ஆளுநர் மாளிகை வெளியிட்ட எக்ஸ் பதிவில், “மாநிலத்தில் சமீபத்தில் நடந்த வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகளுடன் இணைந்து முடிந்த அனைத்தையும் ஆளுநர் செய்வார்.” என தெரிவிக்கப்பட்டிருந்தது. உண்மை நிலையை கண்டறியவே அவர் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் செல்ல உள்ளார் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.



“நான் களத்தின் யதார்த்தங்களை நேரில் காண களத்திற்குச் செல்கிறேன். நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இதுபோன்ற நிகழ்வுகளைத் தடுக்க நாம் கூடுதல் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நான் நிச்சயமாக முர்ஷிதாபாத்துக்குச் செல்வேன். அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் அங்கு ஒரு பிஎஸ்எஃப் முகாமை அமைக்கக் கோரியுள்ளனர்,” என்று ஆளுநர் சி.வி. ஆனந்த போஸ் கூறினார்.

வக்பு சட்டத்தில் மத்திய அரசு மேற்கொண்ட திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த 11ம் தேதி மேற்கு வங்கத்தின் மால்டா, முர்ஷிதாபாத் உள்ளிட்ட முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள மாவட்டங்களில் வன்முறை வெடித்தது. அங்குள்ள இந்துக்கள் தாக்கப்பட்டார்கள். அவர்களின் சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டன. இந்த வன்முறையில் மூன்று பேர் கொல்லப்பட்டனர், பலர் காயமடைந்தனர். பல குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. பலர் ஜார்க்கண்டின் பாகூர் மாவட்டத்திற்கு குடிபெயர்ந்துள்ளனர். மற்றவர்கள் மால்டாவில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இதனிடையே, சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க மத்தியப் படைகள் சிறிது காலம் முர்ஷிதாபாத்தில் தங்கியிருக்கும் என்றும், பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வை நீதிமன்றம் கண்காணிக்கும் என்றும் கொல்கத்தா உயர் நீதிமன்றம் வியாழக்கிழமை கூறியது. பாஜக, டிஎம்சி மற்றும் பிற கட்சிகளைச் சேர்ந்தவர்கள் யாரும் பதட்டத்தை அதிகரிக்கக்கூடிய ஆத்திரமூட்டும் பேச்சுகளை நடத்த வேண்டாம் என்றும் நீதிமன்றம் அறிவுறுத்தியது.

# பழனியில் வக்பு சட்டத் திருத்தத்திற்கு இடைக்கால தடையை வரவேற்று தவெக சார்பாக இனிப்புகள் வழங்கல்





பழனி ஏப்.21

பழனியில் வக்பு சட்டத் திருத்தத்திற்கு இடைக்கால தடை விதித்ததை வரவேற்று தமிழக வெற்றி கழகத்தின் சார்பாக சின்ன பள்ளிவாசல் அருகே இனிப்புகள் வழங்கினர்.

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் அறிவுறுத்தலின்படி

வக்ஃபு வாரிய திருத்த சட்ட திருத்திற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் மனு தாக்கல் செய்திருந்தார். அதனை தற்போது உச்சநீதிமன்றம் பரிசீலனை செய்து இஸ்லாமியர்கள் வக்ஃபு உறுப்பினர்கள் ஆக முடியாது என்ற சட்ட திருத்ததிற்கு இடைக்கால தடை விதித்ததை வரவேற்று கொண்டாடும் வகையிலும் பழனி காந்தி ரோட்டில் அமைந்துள்ள சின்ன பள்ளிவாசல் அருகே தொழுகையை முடித்து வந்து கொண்டிருந்த இஸ்லாமிய சகோதரர்களுக்கு கழகம் சார்பாக இனிப்புகள் வழங்கப்பட்டது இந்நிகழ்வில் மாவட்டச் செயலாளர் கார்த்திக் ராஜா இணைச் செயலாளர் விஜய் சிவா மாவட்ட செயற்குழு உறுப்பினர் பாலன். நகரச் செயலாளர் மிதுன் மற்றும் மாவட்ட சார்பணி நிர்வாகிகள் நகர ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டு இந்நிகழ்வினை சிறப்பித்தனர்புகள் வழங்கினர்..

# காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் மண்ணிவாக்கத்தில் செயல் வீரர்கள் கூட்டம்



மண்ணிவாக்கம், ஏப்.21

காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் மண்ணிவாக்கத்தில் செயல் வீரர்கள் கூட்டம் நடைபெற்றது

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய சார்பில் மாண்புமிகு அமைச்சர், காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன் அவர்களின் ஆணைக்கிணங்க காஞ்சி நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், காஞ்சி மாவட்ட கழகத் துணைச் செயலாளர்

செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி காட்டாங் கொளத்தூர் வடக்கு ஒன்றிய செயல்வீரர்கள் கூட்டம் மண்ணி வாக்கம் சமுதாயக்கூடத்தில் மாலை 4 மணி அளவில் நடைபெற்றது இக்கூட்டத்தில் காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் எம்.டி.லோகநாதன் தலைமையில் நடைபெற்றது மாவட்ட மகளிரணி அமைப்பாளர் காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் உதயா கருணாகரன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஒன்றிய குழு துணை தலைவர் ஏ.வி.எம் இளங்கோவன், ஒன்றிய பொறுப்புக் குழு உறுப்பினர்கள் ஜே.வி.எஸ். ரங்கநாதன், கே.எஸ்.ரவி, டி.குணா, ஏ.ஜே.ஆறுமுகம், மா.வே. பொன்னுசாமி, பா.ராஜேந்திரன், ஆ.கருணா கரன், ஆர்.டி.ஸ்ரீகாந்த், இ.பத்மநாபன் ஆகியோரின் முன்னிலையிலும் மாவட்ட பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஊராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள், ஒன்றிய இளைஞரணி, மாணவரணி மகளிர் அணி, மற்றும் ஊராட்சியில் அடங்கிய கிளைக் கழக செயலாளர் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழகத் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இறுதியில் இக்கூட்டத்தில் குன்றத்தூரில் கலைஞர் கைவினைத் திட்டத்தை துவக்க வருகை தரும் தமிழக முதல்வர் அவர்களை வரவேற்கும் நிகழ்ச்சியில் சுமார் 2500 பேர் கலந்து கொள்வது ஏற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.




கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் உத்தரவுப்படி காவல்துறை காவல் துணை கண்காணிப்பாளர் மகேஷ் குமார் மேற்பார்வையில் கன்னியாகுமரி போக்குவரத்து காவல் ஆய்வாளர் அருண் போக்குவரத்து உதவி ஆய்வாளர் ஜெயபிரகாஷ் மற்றும் போக்குவரத்து காவலர்கள் கன்னியாகுமரி உட்கோட்டத்தில் சாலை விபத்துகளை தடுக்கும் விதமாக முதற்கட்டமாக கன்னியாகுமரி, அஞ்சுகிராமம், மயிலாடி, தென்தாமரை குளம், தேரிவிளை , முகிலன் குடியிருப்பு கொட்டாரம் , பால் குளம் உள்ளிட்ட எட்டு இடங்களில் விழிப்புணர்வு பதாகைகள் வைத்து பொதுமக்களிடையே சாலை போக்குவரத்து பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர். இதனால் பல பொதுமக்கள் பயன் அடைவதுடன் கன்னியாகுமரி மாவட்டத்தில் சாலை விபத்துகளும் பாதியாக குறைந்துள்ளது. விபத்தில்லாத கன்னியாகுமரியை உருவாக்குவோம் என்ற மாவட்ட காவல் துறையின் முக்கிய நோக்கத்தை அடைய பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு தர வேண்டும் என கன்னியாகுமரி போக்குவரத்து காவல்துறையினர் சார்பாக பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.



செங்கல்பட்டு மாவட்டம் பெருங்களத்தூரில் பெனியல் ஸ்போர்ட்ஸ் அகாடமி சார்பில் இலவச சிலம்பம் மற்றும் கரேத்தே பயிற்சி மே 1ஆம் தேதி முதல் 31ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இந்த பயிற்சி முகாம் சதானந்தபுரம் ஆர்போஸ் கேட் அருகில் உள்ள பெனியல் ஸ்போர்ட்ஸ் அகாடமியில் திங்கள் கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை தினமும் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறுகிறது விருப்பமுள்ளவர்கள் இந்த 9952925481, 8248661261, 6369215430 இந்த எண்ணிற்கு தொடர்பு தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளலாம் இது பொதுமக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு ஏற்பட்டிருக்கிறது.



கன்னியாகுமரி அய்யன் திருவள்ளுவர் சிலை கண்ணாடி இழைபாலத்தில் கடந்த 15 ம் தேதி முதல் சிறு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது.தற்போது பராமரிப்பு பணிகள் நிறைவடைந்துள்ளதால் சுற்றுலா பயணிகள் கண்ணாடி இழை பாலத்தில் அனுமதிக்கப்படுவார்கள் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

# எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கான தேசியத் திறனாய்வு தேர்வில் மாவட்ட அளவில் முதலிடம் பெற்ற ஸ்ரீ சிவசைலநாத நடுநிலைப்பள்ளி மாணவன்

தென்காசி ஏப்.21

தென்காசி மாவட்டத்தில் மத்திய அரசு நடத்திய எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கான தேசிய திறனாய்வுத் தேர்வில் நெடுவயல் ஸ்ரீ சிவசைலநாத நடுநிலைப்பள்ளி மாணவர்கள் கௌதம், பரத்கனிஷ்கன், பாலமுகனா, இசாராகினி, பாலசிவானி, காவியா, விக்னேஷ், கௌசிக், உமனேஷ், இஷாந்த், வைஷ்ணவி, மருதுபிரியன், சத்யா, சஞ்சனா, சுபாஷ்மணி, கதிர் ஆகிய 16 மாணவர்கள் தேர்வில் வெற்றி பெற்றனர் மாணவன் கௌதம் மாவட்ட அளவில் முதலிடமும் மாநில அளவில் 15 வது இடமும் பெற்றுள்ளார். இப்பள்ளி அதிக மாணவர்கள் தேர்ச்சியில் மாவட்ட அளவில் இரண்டாம் இடம் பெற்றுள்ளது வெற்றி பெற்ற மாணவ மாணவிகளையும் தலைமை ஆசிரியை சுதா நந்தினி மற்றும் பயிற்சி அளித்த ஆசிரியர்கள்



லதா சாந்தி பிரபாகரன் ஆகியவரையும் மாவட்ட ஆட்சித்தலைவர் கமல்கிஷோர் அவர்கள் நேரில் அழைத்து பாராட்டி பரிசு வழங்கினார். மேலும் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ரெஜினி, மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் ஜெயலட்சுமி, கடையநல்லூர் வட்டார கல்வி அலுவலர்கள் மகேஸ்வரி, முத்துலிங்கம் மற்றும் பள்ளி தாளாளர் கணேஷ் ராம் செயலர் தம்பு சாமி பள்ளி குழு உறுப்பினர் மணிகண்டன் மற்றும் ஆசிரியர்கள் தேர்ச்சி பெற்ற மாணவச் செல்வங்களை பாராட்டினர்.


# விழுப்புரம் மாவட்டம் மேல்பாதி தர்மராஜா திரௌபதி அம்மன் கோயிலில் மீண்டும் ஒரு கால பூஜைக்கு திறப்பு

விழுப்புரம், ஏப்.21

விழுப்புரம் கோலியனூர் அருகே உள்ள மேல்பாதி திரௌபதி அம்மன் கோயில்18.04.2025 அன்று திறக்கப்பட்டது இருதரப்பில் ஒருவர் கூட சாமி தரிசனம் செய்ய வரவில்லை.

கடந்த 2023ம் ஆண்டு வழிபாடு செய்வதில் இரு தரப்பு மக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதல் காரணமாக கோயில் மூடப்பட்ட நிலையில், சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுப்படி போலீஸார் பாதுகாப்புடன் கோயில் திறக்கப்பட்டது.17.04.2025 அன்று திறக்கப்பட்ட கோயிலில் பட்டியலில் மக்கள் 60க்கும் மேற்பட்டோர் வந்து சாமி தரிசனம் செய்தனர்.

கோவிலில், கோவில் நடைமுறைப்படி ஒருகால பூஜை முடிந்து நடை சாத்தப்பட்டது.




அனைத்து தரப்பு மக்களும் வழிபட்டு விட்டு கலைந்து சென்றனர்.

வெள்ளிக்கிழமையான 18.04.2025 மீண்டும் காலை 6 மணிக்கு கோயில் திறக்கப்பட்டது இன்று வந்து சாமிதரிசனம் செய்வோம் என்று கூறிய மற்றொரு தரப்பினர் யாரும் காலை 6:00 மணி முதல் 7 மணி வரை தரிசனம் செய்ய வரவில்லை இதனால் மீண்டும் ஒருகால பூஜை நடந்து கோயில் நடை சாத்தப்பட்டது.

தொடர்ந்து கோயிலில் பட்டியல் இன மக்கள் சாமி செய்ய எதிர்ப்பு தெரிவித்த மற்றொரு தரப்பினர் மீண்டும் எங்களிடம் கோவில் நிர்வாகம் வரவேண்டும் எங்களிடம் சாவி கொடுக்க வேண்டும் அப்பொழுதுதான் நாங்கள் கோயிலுக்கு வருவோம் என்று போலீசாரிடம் வாக்குவாதம் செய்தனர் அப்படி இல்லை என்றால் எங்களுக்கு கோயிலே தேவையில்லை அதை நாங்கள் இடித்து விடுகிறோம் என்று ஆவேசமாக போலீசாரிடம் பெண்கள் கூறினார்கள்,

இதைத் தொடர்ந்து அவர்களிடம் போலீசார் அவர்களிடம் தொடர்ந்து சமாதான பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு வருகின்றனர் மீண்டும் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கோயில் நடை திறக்கப்படும் அப்பொழுதாவது எதிர் தரப்பினர் சாமி தரிசனம் வருகிறார் என்று விவரங்கள் தெரியும் என்று போலீசார் கூறுகின்றனர்.

தொடர்ந்து மேல் பாதி கிராமத்தில் கோவில் விவகாரத்தில் பதட்டமான சூழல் நிலவி வருவதால் கோயிலை சுற்றி நூற்றுக்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி 48வது வார்டுக்குட்பட்ட இடலாக்குடி அரசு தொடக்கப் பள்ளியில் ரூ8.70 இலட்சம் மதிப்பீட்டில் மறுசீரமைப்பு பணியின நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் துவக்கி வைத்தார். மேலும் பள்ளி கூடம் முழுவதும் ஆய்வு மேற்கொண்டார். உடன் மண்டல தலைவர் அகஸ்டினா கோகிலவாணி, மாமன்ற உறுப்பினர்கள் .பியாஷா ஹாஜி பாபு, சொர்ணத்தாய் பகுதி செயலாளர் .துரை வட்ட செயலாளர் அன்சாரி .முருகன், இடலை சாகுல் செயற்குழு உறுப்பினர் சதாசிவம் அணி நிர்வாகி .ஹிதாயத், . ஹாஜி பாபு தி மு க நிர்வாகிகள் .முகம்மது இப்ராஹிம் ராஜதுரை, மக்கீன், சிவகுமார் பள்ளி தலைமை ஆசிரியர் சுஜா மற்றும் கழக நிர்வாகிகள் பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர்.





தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் தலைமையில் சென்னையில் நடைபெறவுள்ள கலைஞரின் கைவினைத்திட்ட துவக்க விழா நிகழ்ச்சிக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 95 திட்ட பயனாளிகளை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நேற்று மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா, வாழ்த்தி, வழியனுப்பி வைத்தார்.

# தமிழ்நாடு அனைத்து மின் பணியாளர் முன்னேற்ற நல சங்கத்தின் சார்பில் ஒரு நாள் சோலார் பயிற்சி



செங்கல்பட்டு, ஏப்.21

செங்கல்பட்டு மாவட்டம் தமிழ்நாடு அனைத்து மிண் பணியாளர் முன்னேற்ற நல சங்கத்தின் சார்பில் சோலார் பயிற்சிகள் நடைபெறுகிறது விருப்பம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் பதிவு செய்ய 500 ரூபாய் மட்டும் புகைப்படம் இரண்டு அனுப்பி பதிவு செய்ய இந்த போன் நம்பர் 90 944 64297 என்ற எண்ணிற்கு நிறிகிசீ மூலம் பணம் செலுத்தி உறுதி செய்து கொள்ளலாம் ஒரு நபருக்கு 2000 ரூபாய் பயிற்சி வகுப்பு ஒரு நாள் மட்டும் ஞாயிற்றுக் கிழமையில் பயிற்சி நடைபெறும் இந்த சோலார் ட்ரைனிங் யாரு வேண்டுமானாலும் 18வயது நிரம்பி இருந்தால் போதும் தொழில் சொந்தமாக தொடங்க விருப்பமுள்ளவர்கள் சோலார் பற்றி எல்லாம் முன்னேற்றத்தை எடுத்துக் கொள்ள விதமாக வந்து பயிற்சி அளிக்கிறார்கள் பயிற்சியில் முடிந்தவுடன் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்..

# தாம்பரத்தில் ஒருங்கிணைந்த காஞ்சி செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டம்




தாம்பரம் ஏப்.21

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் ஒருங்கிணைந்த காஞ்சி மற்றும் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவர் மாவட்ட தலைவர் எஸ்

கே.ஜாஹிர் உசேன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது .

சிறப்பு அழைப்பாளராக மனிதநேய மக்கள் கட்சி மாநில துணை பொது செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் தாம்பரம் எம்.யாக்கூப், தமுமுக மாநில செயலாளர் சிவகாசி முஸ்தபா, மாநில அமைப்பு செயலாளர் வழக்கறஞர் புழல் ஷேக் முஹம்மதுஅலி, காஞ்சி மாவட்ட தலைவர் ஜே.சலீம் கான் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்

செயற்குழு கூட்டத்தில் வக்ஃப் திருத்த சட்டத்தை கண்டித்து தமுமுக சார்பாக ஏப்ரல் 22 ஆம் தேதி நடைபெற உள்ள சென்னை ரிசர்வ் வங்கி முற்றுகை போராட்டத்திற்கு அதிக அளவில் மக்களை திரட்டி கொண்டு கலந்து கொள்வது என தீர்மானம் செய்யப்பட்டது.

தாம்பரம் கஸ்தூரிபாய் நகர் பகுதியில் மஸ்ஜிதே மதரஸா என்ற பெயரில் சுற்று வட்டார பகுதிகளான ஏழாவது தெரு, ஜீவா தெரு, அண்ணா தெரு, ஜாகிர் உசேன் தெரு, கல்யாணசுந்தரம் தெரு, கல்யாணசுந்தரம் ஒன்றாவது, மூன்றாவது குறுக்கு தெருக்கள், சாமியார் தோட்டம் ஒன்றாவது, இரண்டாவது, மூன்றாவது, நான்காவது தெருக்கள், வ.உ.சி தெரு மற்றும் வ.உ.சி ஒன்று முதல் ஆறாவது தெரு வரை, சிங்காரவேலன் தெரு, சுந்தரம் காலனி தெருக்கள் உள்ளிட்ட 24 தெருக்களில் வசிக்கும் இஸ்லாமிய மக்கள் பயன்பாட்டிற்காக உருவாக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

இந்தப் பகுதியில் முஸ்லிம் களுக்கான தொழுகை பள்ளி மதரஸா இருக்கக்கூடாது என்று தீய எண்ணத்துடன் திமுக பகுதி துணைச் செயலாளர் மற்றும் வட்ட பிரதிநிதிகள், பாரதிய ஜனதா மற்றும் இந்து முன்னணியுடன் கைகோர்த்துக்கொண்டு மதரசா அருகில் உள்ள டபுள் டாக்குமெண்ட் பிரச்சனைக்குரிய சட்டமன்ற உறுப்பினரின் பினாமி பெயரில் உள்ள இடத்தில் பிள்ளையார் சிலையை வைத்து அதற்கு திமுக நிர்வாகிகளே பாதுகாப்பாக நின்றது வருத்தம் அளிக்கிறது.

தாம்பரம் கோட்டாட்சியர் தலைமையில் பாங்கு என்னும் தொழுகைக்கான அழைப்பு கொடுக்கும் ஒலிபெருக்கியை கலட்ட சொல்லி ஜமாத்தார்களை நிர்ப்பந்தம் செய்து கழட்ட வைத்த செயல் திராவிட மாடல் மக்களாட்சி நடத்தி வரும் முதல்வரின் பெயரை சிறுபான்மை மக்களிடம் கெடுக்க திமுகவினரே மதவாத சக்திகளோடு இணைந்து செயல்படுவதை இந்த செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது.

மேலும் இவர்களின் ஈனச் செயலை தமிழக முதல்வரின் கவனத்திற்கு கொண்டு செல்வதென இச்செயற்குழு தீர்மானம் நிறைவேற்றுகிறது. செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயலாளர் எம்.அப்துல் ரஹீம் வரவேற்புரை ஆற்றினார்கள்.

மனிதநேய மக்கள் கட்சி மாநில இளைஞரணி செயலாளர் எஸ்.தமிம்அன்சாரி, மாநில வழக்கறிஞர் அணி செயலாளர் எம்.முஜிபுர் ரஹ்மான், மாநில பொருளாளர் ஏ.ஆஷிக் ஹமீது, செங்கல்பட்டு வடக்கு மாவட்ட பொருளாளர் எம்.சபிபுல்லா, மு.மாவட்டச் செயலாளர் இப்ராஹிம், மமக காஞ்சி மாவட்ட செயலாளர் எம்.அமீத்கான், தமுமுக மாவட்டச் செயலாளர் முன்னா உள்ளிட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட துணை செயலாளர்கள், மாவட்ட அணி நிர்வாகிகள், ஒன்றிய, பகுதி, நகர நிர்வாகிகள் பங்கேற்றனர் தாம்பரம் மத்திய பகுதி தலைவர் எம்.ஜலாலுதீன் நன்றியுரை ஆற்றினார்.

# தோவாளை வட்டம் பகுதியில் அரசின் விவசாயிகள் அடையாள எண் பெருமுறையை மாவட்ட ஆட்சியர் ஆய்வு

றகன்னியாகுமரி ஏப்.21



கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை வட்டம் தாழக்குடி பேரூராட்சி பகுதியில் அரசின் விவசாயிகள் அடையாள எண் பெருமுறையை மாவட்ட ஆட்சியர் அழகுமீனா ஆய்வு செய்தார்கள்

வேளாண்மை துறை மூலம் வழங்கப்படும் விவசாயிகளின் அடையாள எண்ணை வருவாய் துறையினர் ஆவணங்களுடன் ஒப்பீடு செய்து உறுதி செய்கின்றனர் இந்த முறையை மாவட்ட ஆட்சியர் அழகுமீனா ஆய்வு மேற்கொண்டார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் ஜெங்கின்பிரபாகர்; தோவாளை வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சுரேஷ்; தோவாளை வட்டாட்சியர் கோலப்பன்; துணை வட்டாட்சியர் முருகன்; பூதப்பாண்டி வருவாய் ஆய்வாளர் ராணிநாகேஸ்வரி; தாழக்குடி கிராம நிர்வாக அலுவலர் பாத்திமா; தாழக்குடி பேரூராட்சி தலைவர் சிவக்குமார்; தாழக்குடி பேரூராட்சி முன்னாள் தலைவர் ரோகிணிஅய்யப்பன்; தாழக்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க முன்னாள் தலைவர் விஜயன்; தாழக்குடி பேரூராட்சி துணைத் தலைவர் ராஜா; கவுன்சிலர் இரவிபிள்ளை; மற்றும் விவசாய பெருமக்கள் பலர் கலந்து கொண்டனர் இந்த நிகழ்ச்சியில் தாழக்குடியின் வீரகேரளப்பேஏரியின் பக்கச்சுவர் அனைத்தும் சேதமடைந்து உள்ளதை தெரிவித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் தாழக்குடி பேரூராட்சி முன்னாள் தலைவர் ரோகிணிஅய்யப்பன்; அவர்கள் கோரிக்கை மனு வழங்கினார்.



கன்னியாகுமரி நகராட்சிக்கு உட்பட்ட 2 வது வார்டு மாதவபுரம் பகுதியில் நகராட்சி பொது நிதியிலிருந்து ரூ 9.80 லட்சம் மதிப்பீட்டில் நடைபெறும் அலங்கார தரைஓடு அமைக்கும் பணி நடந்து வருகிறது.இப்பணியை நகராட்சி தலைவர் திரு குமரி ஸ்டீபன் பார்வையிட்டார். உடன் 2 வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் லிங்கேஸ்வரி மணிராஜா, ஊர் தலைவர் முத்துசாமி, இலக்கிய அணி மாவட்ட துணை அமைப்பாளர் அன்பழகன், 2 வது வார்டு செயலாளர் மணி ராஜா, 8 வது வார்டு செயலாளர் ரூபின், நகர இளைஞரணி அமைப்பாளர் ஷ்யாம் ஆகியோர் உள்ளனர்.





கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, கடவூர் தாலுக்கா, மேலப் பகுதி ஊராட்சியில் உள்ள கீழ்ஆனகவுண்டன்பட்டி பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 7 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட நியாயவிலை கட்டிடத்தை இன்று கிருஷ்ணராயபுரம் எம்எல்ஏ சிவகாமசுந்தரி திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் கடவூர் ஒன்றிய செயலாளர், அரசு அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டு புதிய கட்டிடத் திறப்பு விழாவை சிறப்பித்தனர்.

# தூத்துக்குடியில் டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் நினைவு தினத்தை முன்னிட்டு உருவப்படத்திற்கு மரியாதை




தூத்துக்குடி, ஏப்.21.

தூத்துக்குடியில் பத்மஸ்ரீ தினத்தந்தி அதிபர் டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனாரின் 12ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி தூத்துக்குடி அந்தோணியார் கோவில் அருகே உள்ள வ உ சி மார்க்கெட் காமராஜர் சிலை முன்பு அலங்கரிக்கப்பட்ட சிவந்தி ஆதித்தனார் திருவுருவபடத்திற்கு பெருந்தலைவர் மக்கள் நலச்சங்கம் அமைப்பின் நிறுவனத் தலைவர் எஸ் பி மாரியப்பன் நாடார் தலைமையில்

நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செய்து வீரவணக்கம் செலுத்தினர். இந்த நிகழ்ச்சியில் கட்சியின் பொதுச் செயலாளர் மில்லை தேவராஜ், மாநில பொருளாளர் எம்எஸ்டி. ரவி சேகர், தூத்துக்குடி மாவட்ட செயலாளர் சாமுவேல் ராஜ், மாவட்டத் தலைவர் வேல்முருகன், மாவட்ட பொருளாளர் செல்வகுமார் மாநிலச் செயலாளர் சண்முகவேல், மாநில துணைத்தலைவர் எம் கணேசன், மாநில ஒருங்கிணைப்பாளர் மில்லை ஸ்டீபன், கன்னியாகுமரி மாவட்ட செயலாளர் கணேசன்,

தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர் முனீஸ்வரன், விளாத்திகுளம் ஒன்றிய செயலாளர் முனியசாமி, மாவட்ட துணைச் செயலாளர் சக்தி நாராயணன் , மாவட்ட இளைஞரணி செயலாளர் சிவா, அழகுதுரை, கோல்டன் ஸ்டீல் குமார், கிறிஸ்டோபர், கார்த்திக், நட்டாத்தி ஒன்றியம் குமார், மற்றும் பெருந்தலைவர் மக்கள் நலச் சங்க அமைப்பின் நிர்வாகிகள் உறுப்பினர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

பின்னர் அனைவரும் டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனாரின் கல்வி, பத்திரிகை, விளையாட்டு, ஆன்மிகம் மற்றும் சமூக சேவைகளைப் போற்றும் வகையில் அனைவரும் முதலில் ஒரு நிமிடம் மவுன அஞ்சலி செய்து வீரவணக்கம் செலுத்தினர்.

# சின்னமனூர் நகரில் மாற்றுக் கட்சியில் இருந்து விலகி தேசிய நீரோட்டத்தில் இணையும் விழா




சின்னமனூர் ஏப்,21

சின்னமனூர் தனியார் மண்டபத்தில் நடைபெற்ற மாற்றுக் கட்சியை சேர்ந்த சுமார் 300க்கும் மேற்பட்டோர் மாநில பொதுச்செயலாளர் தலைமையில் பாரதிய ஜனதா கட்சியில் இணைந்தனர்.

2026 ஆம் ஆண்டு தமிழகத்தில் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளதால் அரசியல் கட்சியினர் தங்களின் கட்சியை பலப்படுத்தவும், பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கவும் பணிகளை ஆற்றி வருகின்றனர். பல்வேறு கட்சிகளை சேர்ந்த சுமார் 300க்கும் மேற்பட்டோர் பாரதிய ஜனதா கட்சியின் மாநில பொதுச் செயலாளர் ராம சீனிவாசன் தலைமையில் சின்னமனூர் தொழிலதிபர் வி கே ஆர் பாலசுப்பிரமணியன் தலைமையில் ஏராளமானோர் கட்சியில் இணைந்தனர்.இந்த நிகழ்ச்சியில் பாரதிய ஜனதா கட்சியின் மாவட்ட தலைவர் ராஜபாண்டியன், முன்னாள் மாவட்ட செயலாளர் பாண்டியன், சின்னமனூர் கிழக்கு ஒன்றிய தலைவர் சுப்பையா பாண்டியன் கிழக்கு ஒன்றிய முன்னாள் தலைவர் மணிகண்டன் சின்னமனூர் கிழக்கு ஒன்றிய பொதுச் செயலாளர் முருகன் ஆகியோர் முன்னிலை வகித்து பாரதிய ஜனதா கட்சியில் இணைந்த மாற்று கட்சியினரை பாராட்டி பேசினார்கள். நிகழ்ச்சியை தலைமை தாங்கிய மாநில பொதுச் செயலாளர் ராம சீனிவாசன் கட்சியில் இணைந்த அனைவருக்கும் கட்சியின் சால்வையை அணிவித்து உறுப்பினர் அட்டையை வழங்கி இணைத்துக் கொண்டனர்.

# நாடு எதிர்நோக்கியுள்ள சவால்களை சமாளிக்க நேர்மையான இளைஞர்கள் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் லோக் ஆயுக்தா நீதிபதி டாக்டர் வீ. ராமராஜ் வலியுறுத்தல்




பழனி ஏப்.21

தமிழ்நாடு லோக் ஆயுக்தா நீதிபதியாக பொறுப்பேற்றுள்ள டாக்டர் வீ. ராமராஜ் அவர்களுக்கு பழனி எல்ஐசி முகவர்கள் சங்கத்தின் சார்பில் சங்கத்தின் பொருளாளர் பி சின்னராஜ் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது. நாடு எதிர்நோக்கியுள்ள சவால்களை சமாளிக்க நேர்மையான இளைஞர்கள் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என்று ஏற்புரை வழங்கிய லோக் ஆயுக்தா நீதிபதி டாக்டர் வீ. ராமராஜ் வலியுறுத்தினார் அவர் பேசியதாவது.

கடந்த 1988 முதல் 4 ஆண்டுகள் பழனி எல்ஐசி பழனி கிளையில் முகவராக பணியாற்றினேன். அப்போது முகவர்களின் முன்னேற்றத்திற்காக எவ்வித சங்கமும் கிடையாது. அவர்களை ஒருங்கிணைத்து பழனி எல்ஐசி முகவர்கள் சங்கத்தை உருவாக்கி ஓராண்டு காலம் தலைவராக பணியாற்றினேன். 1991 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பழனி எல்ஐசி முகவர்கள் சங்கம் 34 ஆண்டுகளாக தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. எல்ஐசி முகவர்களின் ஒற்றுமையின் மூலம் அவர்களது உரிமைகள் வென்றெடுக்கப்பட்டிருக்கிறது என்று

நாட்டு மக்களிடையே ஒற்றுமை என்பது நாட்டை முன்னேற்றுவதற்கான, மனித வளர்ச்சிக்கான ஆயுதம். அதிகாரத்தை தவறுதலாக பயன்படுத்தும் மனிதர்களிடம் ஒற்றுமை இருக்கிறது. குற்ற செயல்களில் ஈடுபடும் கயவர்களிடம் ஒற்றுமை இருக்கிறது. லஞ்சம் வாங்கும் மனிதர்களிடமும் ஊழல்வாதிகளிடமும் ஒற்றுமை ஓங்கி நிற்கிறது. ஆனால் சமுதாயம் முன்னேற வேண்டும் என நினைப்பவர்களிடம், ஊழல் ஒழிக்கப்பட வேண்டும் என்று நினைப்பவர்களிடம், நேர்மையான மக்களிடம் ஒற்றுமை இல்லை ஏனெனில், நேர்மையாளர்களை ஒருங்கிணைக்க தன்னார்வ அமைப்புகள் சமூகத்தில் குறைவாக உள்ளன

விழாவில் பழனி வழக்கறிஞர்கள் சங்க முன்னாள் செயலாளர். வி. முத்துக்குமார், பொருளாளர் எஸ். ஜெயராமன், தமிழக ஆசிரியர் கூட்டணியின் முன்னாள் பொதுச் செயலாளர் சிவ கணபதி, அரிமா சங்க மாவட்ட தலைவர் டாக்டர் பி பி என் விமல் குமார், புள்ளியல் துறை இணை இயக்குனர் பி மயில்சாமி, போக்குவரத்து துறை மோட்டார் வாகன ஆய்வாளர் பி. ஈஸ்வரன், பூங்கா இதழ் பத்திரிகை ஆசிரியர் பொருளூர் செல்வா உள்ளிட்ட பலர் வாழ்த்து பேசினார்கள். முன்னதாக, பழனி எல்ஐசி முகவர்கள் சங்கத்தின் செயலாளர் எம். பாபு வரவேற்புரையும், இறுதியாக பழனி எல்ஐசி தலைவர் கிளப் உறுப்பினர் ராமசாமி நன்றியுரையும் ஆற்றினார்கள். நிகழ்வில் ஏராளமான எல்ஐசி முகவர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

# மானாமதுரை ஊராட்சிக்கு உட்பட்ட பல்வேறு கிராமங்களை சேர்ந்த கிராம மக்களுக்கு பட்டா வழங்கிய தமிழரசி எம்எல்ஏ




மானாமதுரை ஏப்.21

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஊராட்சிக்கு உட்பட்ட பல்வேறு கிராமங்களை சேர்ந்த மக்களுக்கு சுமார் 84 நபர்களுக்கு பட்டா வழங்க விழா நேற்றுமுன்தினம் மானாமதுரை தாலுகா அலுவலகத்தில் நடைபெற்றது. இவ்விழா வருவாய்த்துறை ஏற்பாட்டில் நடைபெற்றது. மானாமதுரை சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களை சேர்ந்த மக்களுக்கு பட்டாவை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார் வழங்கினார் நீண்ட நாட்களாக மக்கள் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் மானாமதுரை வட்டாட்சியர் கிருஷ்ணகுமார் நடவடிக்கை மேற்கொண்டார். இதில் மானாமதுரை சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களை சேர்ந்த 84நபர்களுக்கு நேற்று பட்டா வழங்கப்பட்டது இந்த விழாவில் துணை வட்டாட்சியர் சரவணகுமார் ,வருவாய் ஆய்வாளர்கள் பாலுச்சாமி, முத்துவேணி ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை ராஜாமணி ,நகர செயலாளர் பொன்னுச்சாமி மாங்குளம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் முருகவள்ளிதேசிங்கு ராஜா மற்றும் நிர்வாகிகள் பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வெப்ப அலை பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டம் அழைப்பு



சிவகங்கை ஏப்.21

சிவகங்கை மாவட்டம் வெப்ப அலை இன்றைய நாட்களில் உலகம் முழுவதும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று உலக சுகாதார நிறுவனம் உலகம் முழுவதும் விழிப்புணர்வை ஏற்படுத்திவரும் வேளையில் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் தமிழகம் முழுவதும் வெப்ப அலை பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரத்தை முன்னெடுக்கும் விதமாக மாநிலம் தழுவிய கருத்தரங்கு பெரம்பலூரில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி இது குறித்து கூறியதாவது. கடுமையான இந்த வெப்ப அலை தமிழகத்தையும் பாதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிக வெப்பநிலை உயிருக்கு ஆபத்தானதாக இருக்கலாம். குறிப்பாக வயதான பெரியவர்கள் சிறு குழந்தைகள் கர்ப்பிணி பெண்கள் சர்க்கரை மற்றும் ரத்த கொதிப்பு போன்ற பாதிப்பு உள்ள மக்களுக்கு இந்த வெப்பநிலை அதிக பாதிப்பை ஏற்படுத்தும் என்று நம்பப்படுகிறது. தீவிரமான மற்றும் நீடித்த வெப்ப அலைகள் மனித விலங்கு மற்றும் சுற்றுச்சூழல் ஆரோக்கியத்தை பாதிக்கின்றது. மேலும் இந்த மாறிவரும் சூழ்நிலையினால் நீடித்து செழித்து வளர மனித தாவர மற்றும் விலங்கினங்களின் தகவமைப்பு திறன்களை பாதிப்படையச் செய்கின்றது. மனித வாழ்க்கைக்கு வெப்பநிலை வரம்பு 60% ஈரப்பதத்துடன் 20 30 டிகிரி செல்சியஸ் தேவைப்படுகிறது. இருப்பினும் தமிழகத்தின் பல பகுதிகளில் இந்த வரம்பு தொடர்ந்து உயர்ந்து காணப்படுகிறது. அதிக வெப்ப நிலை மற்றும் ஈரப்பதம் வாழ்க்கையையும் வாழ்வாதாரத்தையும் பாதிக்கிறது. ஆகவே மக்களுக்கு தமிழ்நாடு அறிவியல் இயக்கம் கீழ் கண்ட விழிப்புணர்வுகளையும் நடவடிக்கைகளையும் முன்வைக்கிறது.

பாதுகாப்பாக இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். ஏராளமான தண்ணீர் மற்றும் எலக்ட்ரோலைட் (ஒரு லிட்டர் தண்ணீர் 1/4 டீஸ்பூன் உப்பு 6 டீஸ்பூன் சர்க்கரை) நிறைந்த திரவங்களை குடிப்பதன் மூலம் நீர் சத்து குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பகல் நேரத்தில் வெப்பமான பகல் பொழுதில் காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை வீட்டிற்குள் இருங்கள். இலகுரக தளர்வான பொருத்தமான வெண்மை நிற ஆடைகளை அணியுங்கள். பகல் நேரத்தில் கடுமையான உடல் உழைப்பு செயல்களை தவிர்க்கவும். குறிப்பாக பகல் பொழுதில் வயதான பெரியவர்கள் சிறு குழந்தைகள் கர்ப்பிணி பெண்கள் மற்றும் நோய் குறைபாடுகள் உள்ளவர்கள் பாதுகாப்பாகவும் நிழல் நிறைந்த இடத்தில் இருப்பதை உறுதி செய்யவும். தொடர்ந்து அதை உறுதிப்படுத்த வேண்டும். பகல் பொழுதில் வெயிலில் செல்லும் பொழுது கையில் குடையினை எடுத்துச் செல்லவும். தர்பூசணி வெள்ளரிக்காய் போன்ற நீரேற்றம் தரும் உணவுகளை உண்ணுங்கள். நிறுத்தப்பட்ட வாகனத்தில் குழந்தைகள் அல்லது செல்லப் பிராணிகளை ஒருபோதும் தனியாக விடாதீர்கள். குறைந்தபட்சம் ஷிறிதி 30 கொண்ட சன் ஸ்கிரீனை பயன்படுத்தவும். ஒவ்வொரு 2 மணி நேரத்திற்கு மீண்டும் தடவவும். இஸ்திரி பெட்டி முடி உலர்த்திகள் போன்ற வெப்பத்தை உருவாக்கும் மின் சாதனங்களை பயன்படுத்துவதை தவிர்க்கவும். சமையலை காலையில் மாலையில் வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் உடல் வெப்பநிலையை குறைக்க சிறு குளியல் எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு நாளைக்கு ஆண்கள் (2.6 லிட்டர் 3.7 லிட்டர்)பெண்கள் (2.1 லிட்டர் 2.7 லிட்டர்)மற்றும் குழந்தைகள் (1 லிட்டர் 2 லிட்டர்) கர்ப்பிணி பெண்கள் (2.3 லிட்டர் 3 லிட்டர்) தண்ணீர் அருந்த வேண்டும். வர்த்தக சங்க பிரதிநிதிகள் உள்ளூர் முக்கியஸ்தர்கள் தன்னார்வலர்கள் அனைவருக்கும் தண்ணீர் கிடைப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும். வெப்ப அலைகள் இன்றைய எதார்த்த உண்மையாக இருந்தாலும் சரியான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் விழிப்புணர்வு மூலம் அதன் தாக்கத்தை குறைக்க முடியும். ஒவ்வொரு தனி மனிதனும் தன்னை பாதுகாத்து மற்றவர்களுக்கு உதவுவதன் மூலம் ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க முடியும். வெப்பத்தை வெல்ல அறிவியலால் ஒன்றிணைவோம் என்று கேட்டுக் கொண்டார்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161